அ.வ.எண். 28/2020 நாள்: 18.06.2026

வா.சா.1 திரு.முருகானந்தம்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு தொடர்ச்சி</u>

8) வழக்கு சொத்திற்கு அருகிலுள்ள எனது வீடு இடிந்து 20 வருடம் இருக்குமா என்றால் 15 வருடங்கள் இருக்கும். மேற்படி வீடு இடியும்வரை நானும் எனது பெற்றோரும் சகோதரியும் அந்த வீட்டில்தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். அவ்வாறு வீடு இடிந்த பிறகு மெயின்ரோட்டிற்கு புது வீடு கட்டி குடிவந்துவிட்டோம் என்றால் சரிதான், அந்தவீடு கட்டி எத்தனை வருடம் இருக்கும் என்றால் 1998-ல் கட்டினோம். அவ்வாறு 1998-ல் வீடு கட்டியபிறகு வழக்கு சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான், அவ்வபோது வந்து செல்வோம். எங்களது இடிந்த பழைய வீட்டிற்கு கிழக்கிலும், மேற்கிலும் மற்றவர்களுக்கு வீடு உள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி திருநாவுக்கரசு குடியிருக்கும் வீடு எத்தனை வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது என்றால் 20 வருடங்களுக்கு மேல் இருக்கும்.

9) 3ம் பிரதிவாதியின் வீட்டின் மேல்புறம் உள்ள சன்சேடு எங்களது இடிந்த வீட்டினை பார்த்து உள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி திருநாவுக்கரசு வீட்டின் பின்பக்கம் தண்ணீர் தொட்டி, பஞ்சாயத்துபோர்டு பைப்லைன், மாட்டுக்கொட்டகை, சிறிய மூங்கில் கொத்து ஆகியன உள்ளது என்றால் சரிதான். மேற்படி அனைத்தும் புல எண்.76/28-ல் உள்ளது என்றால் ஆரம்பத்தில சிறிய மூங்கில் கொத்து மட்டும் இருந்தது. மேற்படி புல எண்.76/28-ல்தான் 3ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் வேலைக்கு சென்று சம்பாதித்தால் எனது அப்பாவின் சொத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

10) சித்திவிநாயகர் நன்செய்க்கு கிழக்கு, குணசேகரன் மனைக்கு வடக்கு, திருநாவுக்கரசு, ராஜகோபால் மனைக்கு மேற்கு, அர்ஜூனன் மனைக்கு தெற்கு இதற்குட்பட்டதுதான் முதல் இன தாவா சொத்து என்றால் தவறு. மேற்படி நான்கெல்லைக்குள் உள்ள சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை என்றால் (சாட்சி அதற்கு பதில் சொல்லாமல் நீண்ட நேரமாக மௌனமாக உள்ளார்). தாவா 1ம் இன சொத்தை எனது தகப்பனார் விற்றபிறகு எனது தாயார் உயிரோடு இருந்தவரை மேற்படி கிரையத்தை குறித்து ஏதேனும் ஆட்சேபனை

செய்தாரா என்றால் மேற்படி கிரையம் குறித்து எனது தகப்பனார் எனது தாயாரிடம் கூறவில்லை. எனது தாயார் உயிரோடு இருந்தவரை பிரதிவாதிகள் 1ம் இன தாவா சொத்தை ஆக்கிரமித்துவிட்டார்கள் என்று புகார் ஏதாவது கொடுத்தாரா என்றால் இல்லை.

11) எனது தாயார் உயிரோடு இருந்தவரை எனது தகப்பனார் எனது தாயாருக்கு தெரியாமல் கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்று கூறி மேற்படி கிரைய ஆவணம் செல்லாது என்று விளம்புகை செய்ய கோரி எனது தாயார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. எனது தம்பி வெற்றிச்செல்வன் எந்தத்துறையில் வேலை செய்கிறார் என்றால் வருவாய்துறையில் வேலை செய்கிறார். 3ம் வாதியான எனது தம்பி வெற்றிச்செல்வன் வருவாய் துறையில் பணிபுரிவதால் பிரதிவாதிகளுக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யவிடாமல் இடையூறு செய்துவந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் உயிரோடு இருந்தவரை வழக்கு சொத்து அமைந்துள்ள ஊருக்கு வந்துசென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான்.

12) அதேபோல் நாங்கள் புதுவீடு கட்டி 20 வருடங்களாக குடியிருந்து வரும் வீட்டிற்கு எனது தகப்பனார் வந்து செல்வார் என்றால் அந்த வீட்டில்தான் பணிஓய்விற்கு பிறகு இறக்கும்வரை இருந்தார். எனது தகப்பனார் உயிரோடு இருந்த காலத்தில் 1ம் இன தாவா சொத்தில் பிரதிவாதிகள் அனுபோகம் செய்து வருகிறார்கள் என்று வழக்கு எதாவது தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. எனது தகப்பனார் 13.10.1997-ல் 1ம் இன தாவா சொத்தை கிரைய தொகை முழுமையாக பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுத்த நாள்முதல் 3ம் பிரதிவாதியின் தகப்பனார் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் வெளியூரில் இருந்ததால் அவர் அனுபவம் செய்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

13) 1ம் இன தாவா சொத்தான புல எண்.76/28 குறித்து நான் புகார் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. 1ம் இன தாவா சொத்து குறித்து ஆரம்ப காலம் முதல் எனது தகப்பனாரோ, எனது தாயாரோ, சகோதர சகோதரியோ இதுவரை எந்தவொரு புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2ம் இன தாவா சொத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எல்லைக்கற்கள் எதுவும் இல்லை என்பதால் அதை பிடுங்கவேண்டிய அவசியம் பிரதிவாதிகளுக்கு இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களை அளவீடு செய்தால்தான் கண்டறிய முடியும் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக 2ம்

இன சொத்தை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் கோரும் பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றாலும், எங்களது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Muruganantham

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.18 05:58:05 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU